(2) கி.சதானந்தம், 10–41, மேட்டுத் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

13–வது வார்டு

அமைப்பாளர் : ச.வருதராஜன், 9–72, தோப்புக்காடு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) மு.சண்முகராஜ், 7–64, பெருமாள் கோயில் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல். (2) சி.செந்தில்குமார், தோப்புக்காடு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

14–வது வார்டு

அமைப்பாளர் : சு.கௌதம், 5–50 (2), புதுக்காடு தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) அ.துரைசாமி, 2–145, கிழக்குத் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல். (2) ரமேஷ்குமார், 7–39, வண்டிக்காரன் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

15–வது வார்டு

அமைப்பாளர் : மா.சதீஸ்குமார், 14–42, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) அ.மா. பிரவீன், 77–4, பழைய நெசவாளர் குடியிருப்பு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல். (2) க.ரமேஷ்கண்ணா, 4–7, கிழக்குத் தெரு, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

பாக அமைப்பாளர்கள் :

பாகம் – 157 : மு.மாசிலாமணி, 2/18, முனியப்பன் கோயில் தெரு–2, குருசாமிபாளையம் இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 158 : ப.சங்கர், 3/3, கிழக்குத் தெரு, குருசாமி பாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 159 : அ.விக்னேஷ், 128/14, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 160 : மோ.சரண்குமார், 1, புதூர் குடியிருப்பு, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 161 : இ.சதீஸ்குமார், 8/13, குருசாமிபாளையம், பிள்ளாநல்லூர், பேரூர், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 162 : ப.பூபதி, 11/23, மேட்டுத்தெரு, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 163 : க.சரவணன், 60/4, நெசவாளர் குடியிருப்பு, குருசாமிபாளையம், நாமக்கல்.

பாகம் – 164 : கா.இளவரசன், குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 165 : மா.இளங்கோ, 13/48, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பட்டணம் பேரூர்

1–வது வார்டு

அமைப்பாளர் : பெ.துரைக்கண்ணன், 27, சடையன் தோட்டம், போதமலை தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) ப.வியாசன், 40–1, போதமலை தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) ச.நவீன்குமார், 1–26, சடையன் தோட்டம், பட்டணம், இராசிபுரம்.

2–வது வார்டு

அமைப்பாளர் : ர.தேசப்பிரவீன், 33–1, நேரு நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) கா.சுபாஷ், 6/20, கருப்பண்ணார் கோயில், வண்டிக்காரர் தோட்டம், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) கு.சரவணன், 2–36, நேரு நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

3–வது வார்டு

அமைப்பாளர் : பிரவீன்குமார், 156–96–ஏ, அம்பேத்கர் நகர், குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) க.துர்கேஷ், 8–3, செல்லியம்மன் கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) த.ஜெயசூர்யாசிம்மா, 1–3, குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

4–வது வார்டு

அமைப்பாளர் : கோ.பாலாஜி, கருப்பண்ணார் கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) இரா.கமலேஷ், குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) பெ.காந்தமுத்து, 3–3–ஏ, பாவாத்தா கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

5–வது வார்டு

அமைப்பாளர் : செ.பரத், 5–74, குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) த.பாலகிருஷ்ணன், 4–2, இந்திரா நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) க.மகிழன், 8–3, செல்லியம்மன் கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

6–வது வார்டு

அமைப்பாளர் : இ.சந்துரு, 101, உண்ணாமலைத் தோட்டம், மேட்டாங்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) ம.பூபாலன், 6/16, காட்டுக் கொட்டாய், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) சு.மாணிக்கவேல், 82–2, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

7–வது வார்டு

அமைப்பாளர் : பா.கவின் கிஷோர், 15/7, பரமேஸ்வர் நகர், பட்டணம் , இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) பா.பிரபாகரன், 159, பரமேஸ்வரர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) ம.ஸ்ரீநாத், 199–52, பரமேஸ்வரர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

8–வது வார்டு

அமைப்பாளர் : சு.ஸ்ரீதரன், 58–59, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) ஜெ.கௌரிசங்கர், 8–1, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) ரா.ஹரிகரன், 26–29, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

9–வது வார்டு

அமைப்பாளர் : சே.மணிகண்டன், 60, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) செ.கபிலேஸ்வரன், 8–34, திருவள்ளுவர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ந.தாமரைச்செல்வன், 12–ஏ, திருவள்ளுவர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

10–வது வார்டு

அமைப்பாளர் : சு.பிரபாகரன், 99–10, ஏரி வயக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) ரா.பூபாலன், 106, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ந.தரணி, 59–ஏ, ஏரிவயக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

11–வது வார்டு

அமைப்பாளர் : சி.விக்னேஷ்குமார், 13–1, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) மணிகண்டன், 47–சி, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) அ.பழனிவேல், 51–ஏ, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

12–வது வார்டு

அமைப்பாளர் : பா.பேரரசன், 130, பள்ளிக் கூடத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) த.விக்னேஷ், 87, பள்ளி வீதி, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ச.நவீன்குமார், 331, பள்ளிக்கூடத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

13–வது வார்டு

அமைப்பாளர் : ப.ஜெகன், 103, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) வெ.ரோசன் குமார், 58–1, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ந.அஸ்வின், 109, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

14–வது வார்டு

அமைப்பாளர் : ர.மாணிக்கம், 103–118, வடக்குத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) பூ.கார்த்திக், 91–1, வடக்குத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ரா.பிரபு, 101, வடக்குத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

15–வது வார்டு

அமைப்பாளர் : பா.இனியவேல், 104, ஏரிக்காடு, ஆலத்தூர் ஏரி, வயக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) மா.காவியன், 4–5, பாவாத்தா கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) மா.விக்னேஷ், 4–5, பாவாத்தா கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாக அமைப்பாளர்கள் :

பாகம் – 81 : பா.வசந்தராஜ், 1/2,போதமலை தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 82 : மா.கார்த்தி, 10/11, குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 83 : சு.கிருஷ்ணமூர்த்தி, 157, பள்ளிக்கூடத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 84 : க.சுஜித்குமார், 76,கணபதி தோட்டம், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 85 : பா.விஷால், 15/7, பரமேஸ்வரர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 86 : ரா.மணிகண்டன், 47–சி, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 87 : பா.ஜெகன்பாண்டியன், 103, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 18–10–2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

“நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்” கடந்த வாரம் வரை

372 முகாம்கள் நடத்தப்பட்டு 5,91,455 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள்!

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக்.19-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (18.10.2025) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு அரசு மேல் நிலைப்பள்ளியில் நடைபெறும் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி தீர்வுக்கான சான்றிதழ்களை வழங்கினார். பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டம்

தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு சிறப்பு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் “நலம் காக்கும் ஸ்டாலின்” எனும் மகத்தான திட்டம் கடந்த 02.08.2025 அன்று சென்னையில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதும் 1,256 முகாம்கள் நடத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், சென்னைக்கு அடுத்து 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 வீதம் 20 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 வீதம் 57 முகாம்கள் என்கின்ற அளவிலும், தமிழ்நாட்டில் உள்ள 388 வட்டாரங்களில் தலா 3 என்கின்ற வகையிலும் ஆக ஒட்டு மொத்தம் 1,256 முகாம்கள் நடத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு சனிக்கிழமையும் 38 வருவாய் மாவட்டங்களில் இம்முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த சனிக்கிழமையோடு சேர்த்து 10 வாரங்கள் இம்முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. இம்முகாம்கள் 372 இடங்களில் நடைபெற்றுள்ளது. இதில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 5,91,455 பேர். இன்று தமிழ்நாடு முழுவதும் 35 இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த முகாம்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்கள் தரப்பட்டு வருகிறது. இந்த சான்றிதழ் பெறுவதற்கு மருத்துவர்களின் ஆலோசனை, மருத்துவர்களிடத்தில் அவர்களுக்கு எத்தனை சதவிகிதம் அளவிற்கு பாதிப்பு இருக்கின்றது என்று அறிந்து சான்றிதழ் வழங்குதல், தொடர்ந்து வருவாய் அளவில் சான்றிதழ் பிறகுதான் மாற்றுத்திறனாளி சான்றிதழ் பெற முடியும் என்கின்ற நிலை இருந்தது.

எனவே மாற்றுத்திறனாளிகள் பல்வேறு அலுவலகங்களுக்கு சென்றுதான் இச்சான்றிதழ் பெறும் நிலை இருந்தது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்தந்த பகுதிகளிலேயே நடைபெறுகின்ற முகாம்களில் மாற்றுத்திறனாளிகள் நேரிடையாக வருகை புரிந்து அவர்களுடைய மாற்றுத்திறன் அளவினை மருத்துவர்களிடம் காண்பித்து அன்றைய நாளிலேயே சான்றிதழ்கள் பெறும் நிலையினை தந்திருக்கிறார்கள்.

மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் 1.47 கோடி குடும்பங்கள் பயன் பெற்று வருகின்றனர். இருந்தாலும் புதியதாக குடும்பங்கள் இத்திட்டத்தில் பதிவு செய்தவுடன் அவர்களுக்கும் காப்பீடு அட்டைகள் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இம்முகாமில் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியியல் மற்றும் மகளிர் நல மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்திய முறை மருத்துவம் போன்ற 17 வகையான மருத்துவ முறைகள் இந்த முகாம்களில் நடத்தப்படவிருக்கிறது.

பொதுவாக முதலமைச்சர் அவர்களின் வாயிலாக மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டம் நடைமுறையில் இருக்கின்றது. இதுவரை 2.5 கோடி பயனாளிகளின் வீடுகளுக்கே சென்று மருந்துகள் வழங்கப்படும் நிலையில் முழு உடற் பரிசோதனை என்னும் வகையில் இந்த முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தனியார் மருத்துவமனைகளில் முழு உடற்பரிசோதனைகளுக்கு ரூ.20,000/ வரை செலவாகும். அரசு மருத்துவமனைகளில் கூட ரூ.4,000/ வரை செலவாகும். ஆனால் கட்டணமின்றி இந்த முகாம்களில் முழு உடற்பரிசோதனை செய்யப்படுகிறது. இன்று 11வது வார முகாம்களாக திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு அரசு மேல் நிலைப்பள்ளியில் இம்முகாம் நடைபெற்று வருகிறது. மாலை 3 மணி நிலவரப்படி தமிழ்நாடு முழுவதும் 41,343 பேர் பயன் பெற்று இருக்கிறார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தை பொருத்தவரை அறிவிக்கப்பட்டிருக்கின்ற முகாம்களின் எண்ணிக்கை 45, இதுவரை 10 முகாம்கள் முடிவுற்று 19,774 பேர் பயன் பெற்றுள்ளனர். இந்த முகாமில் பங்கேற்பதற்கு ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்று வருகிறார்கள்.

வட கிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான கேள்விக்கு

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாள் வடகிழக்கு பருவமழையொட்டி எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து முக்கிய சேவை துறைகளுடன் ஒரு கூட்டம் நடத்தியிருக்கிறோம். பொதுவாகவே இந்தக் கூட்டம் என்பது கடந்த காலங்களில் எப்போதும் நடத்தப்படாத ஒன்று.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாத்துறை ஆகிய சேவை துறைகளை ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவ மழைகளுக்கு முன்னாள் நாம் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதித்து அவரவர்களுக்கிடையே பொறுப்புகளை ஆவணங்களாக தந்து அனுப்புவது என்பதும், தொடர்ந்து அவரவர் மாவட்டங்களுக்கு மாவட்ட அளவில் கூட்டம் நடத்தி மக்களை பாதுகாப்பதற்கு மழை பாதிப்புகளிலிருந்து அவர்களை தற்காத்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறார்கள்.

அதனால்தான் கடந்த 4.5 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய புயல் பாதிப்புகள், மழை பாதிப்புகளிலிருந்து மக்கள் பெரிய அளவில் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத்துறையைப் பொறுத்தவரை மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் 10,000 முகாம்கள் என்று அறிவித்து அதிகபட்மாக 26,000 முகாம்கள் வரை நடத்தப்பட்டு பல இலட்சம் பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்.

அந்த வகையில் இந்த ஆண்டும் கூட கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.அ.சோமசுந்தரம், மாவட்ட சுகாதரா அலுவலர்கள் மரு.பிரியாராஜ் (திருவள்ளூர்), மரு.பிரபாகரன் (பூவிருந்தவல்லி) திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. ரேவதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்குமுறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு!

பல்கலைகளுக்கிடையே ஆரோக்கியமான போட்டியினை உருவாக்கும்!

சட்டப்பேரவையில் இனிகோ இருதயராஜ் பேச்சு!

சென்னை, அக்.19-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்கு முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய திருச்சி கிழக்கு தொகுதி கழக உறுப்பினர் இனிகோ இருதயராஜ், “இச்சட்ட முன்வடிவால் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டி ஏற்பட வாய்ப்பிருக்கிறது. கல்வி நிறுவனங்களுக்கிடையிலான இந்தப் போட்டி மாணவர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும்” என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

இந்தியாவிலேயே உயர் கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. இந்த மசோதா என்பது ஆராய்ச்சிக் கல்வியை ஊக்கப்படுத்தும். கற்பித்தலில் புதிய உச்சங்களைத் தொட ஊக்கப்படுத்தும். இந்திய சமுதாயம் கல்வி அறிவைப் பெற அடித்தளமிட்டவர்கள் Christian missionaries என்பதை எல்லோரும் அறிவோம். அந்த வகையில், இந்த மசோதா சிறுபான்மையினர் நடத்துகின்ற கல்வி நிறுவனங்கள் தனியார் பல்கலைக்கழகங்களாக மாறுவதற்கு வழி செய்கிறது. ஏற்கெனவே சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் உலகளவில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களோடு tie up செய்து, இங்கிருக்கக்கூடிய மாணவர்களை 1 வருடம் இங்கும், 1 வருடம் அங்கும் என இன்றும் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

Oxford University, Yale University, Cambridge University, Stanford University, Harvard University என பல்வேறு உலகத் தரம் வாய்ந்த university இங்கு அமைவதற்கு அத்தனை வழிகளும் உண்டு. இன்றொன்றையும் பார்த்தீர்களென்றால், இந்த மசோதா 50 இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பல் மருத்துவம் சார்ந்த துணைப் பாடப் பிரிவுகளை, இந்திய மருத்துவப் பாடப் பிரிவு களுக்கேற்றப்படி அரசு ஒதுக்க வேண்டுமென மசோதாவில் தெரியப்படுத்தியிருக்கிறது. இதில் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த மாணாக்கர்களுடைய மருத்துவக் கல்விக் கனவு என்பது சாத்தியப்படுகிறது. அதுமட்டுமல்ல, இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கும்போது, கல்வித் தரத்திலும், புதியப் பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்தும்போதும் பல்வேறு universitiesக்கும், நிறுவனங்களுக்குமிடையே ஆரோக்கியமான போட்டி ஏற்பட வாய்ப்பிருக்கிறது. கல்வி நிறுவனங்களுக்கிடையிலான இந்தப் போட்டி மாணவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமல்ல, கட்டணத்தில் தரமான கல்வி கிடைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

இது ஏதோ இந்த மாநிலத்தில் மட்டும் புதிதாக ஆரம்பிக்கப்படுவதாக நினைக்க வேண்டாம். 100 ஏக்கர் என்ற வரைமுறையெல்லாம் மற்ற மாநிலங்களில் குறைத்து பல வருடங்களாக ஆகிவிட்டது. அதனால்தான் பல பல்கலைக்கழகங்கள் அங்கே செல்கின்றன. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அருமையோடு இதை consider செய்து, இங்கே கொண்டு வந்து பல்வேறு வெளிநாடுகளின் பல்கலைக் கழகங்கள் இங்கு வந்து, நம் மாணவர்களுடைய திறனை மேம்படுத்த வேண்டுமென்கிற மிக உன்னதமான திட்டம். அது ஏனோ தெரியவில்லை இந்த மசோதாவை சிறுபான்மையின நிறுவனங்கள் என்றால் தற்போது அ.தி.மு.க.விற்கு தெரியவில்லை.

அறிமுக நிலையிலே எதிர்க்கிறார்கள். சிறுபான்மையினர் சமுதாயம் என்றால் இப்போதெல்லாம் என்ன நிலையில் இவர்களுக்கு, அரசு உதவிபெறும் சிறுபான்மை நிறுவனங்களை (குறுக்கீடு) காரணம் என்னவென்றால், குறிப்பாக சிறுபான்மையின நிறுவனங்களைப் பற்றி, உதவி பெறும் நிறுவனங்களைப் பற்றி குறை சொல்வது, உண்மையிலே university ஆகக் கூடாது என்று நினைக்கிறீர்களா? தற்போது நீங்கள் சேர்ந்த சேர்க்கையினால் இப்படிச் சொல்கிறீர்களா எனக்கு தெரியாது. (குறுக்கீடு)

இந்த அருமையான மசோதாவை, சிறுபான்மையின மக்களின் சார்பாக, அதுவும் குறிப்பாக St. Joseph’s College கல்லூரி 182 வருடம் பழமை வாய்ந்த கல்லூரி. (குறுக்கீடு). அந்த St. Joseph’s College, University ஆக மாறப்போகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழ்நாடு யாருடன் போராடும் என்ற ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அளித்த பதில் துண்டறிக்கையை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கோணையில் உள்ள பொதுமக்களிடம் வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நிர்வாகிகள் அய்யாதுரை, வாசு, ஆறுமுகம், ரவி, இக்பால்,செல்வமணி ஆகியோர் உள்ளனர்.